**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மேல்நிலைக்கல்வி – தொழிற் கல்வி மேல்நிலைப் பள்ளிகளில் 193 வேளாண்மை தொழிற் கல்வி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களை 01.01.2016 முதல் 31.12.2016 வரை தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (ப.க2(2)த் துறை**

அரசாணை (1டி) எண்.51

நாள்: 08.02.2016
திருவள்ளுவராண்டு 2047
தை மாதம் 25ஆம் நாள்

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித்(விஇ)துறை, நாள்.13.3.2007.
2. அரசாணை (நிலை) எண்.143, பள்ளிக் கல்வித்(விஇ)துறை, நாள்.2.7.2008.
3. அரசாணை(1டி)எண்.91, பள்ளிக் கல்வி(ப.க2(2)த் துறை, நாள்–16.03.2015.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 001241/எல்/இ3/2016, நாள் –13.01.2016.

-----

**ஆணை**

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை தொழிற் கல்விப் பாடத்தினை அறிமுகப்படுத்தும் பொருட்டு 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளில் முறையே 100 பணியிடங்கள் வீதம் மொத்தம் 200 வேளாண்மை தொழிற் கல்வி ஆசிரியர் தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட 200 வேளாண்மை தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடங்களில் 7 பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ள நிலையில் நிரப்பப்பட்ட 193 பணியிடங்களுக்கு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருத்திய ஊதிய விகிதத்தில் ரூ.9300–34600 + தரஊதியம் ரூ.4600/–என ஊதியம் விகிதத்தில் இப்பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காணும் 193 வேளாண்மை தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு 31.12.2015 உடன் முடிவடைந்தமையால் 01.01.2016 முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்ட 193 வேளாண்மைத் தொழிற்கல்வி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு 31.12.2015 உடன் முடிவடைவதால் 01.01.2016 முதல் 31.12.2016 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறுஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

3. இந்த பணியிடங்களில் உள்ள பணியாளர்கள் அடிப்படை ஊதியம் தவிர அகவிலைப்படி போன்ற இதர படிகளையும் அவ்வப்போது அனுமதிக்கப்படும் விகிதங்களில் பெறத் தகுதி உடையவர்களாவர்.

4. இப்பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் இதரப் படிகளுக்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும்.

"2202–பொதுக்கல்வி–02 இடைநிலைக்கல்வி–109 அரசு இடைநிலைப்பள்ளிகள் I திட்டத்தில் சேராதது – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 01 சம்பளங்கள்."
(ததொகு 2202–02–109–AA–0108)

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.5731/Edn-II/2016, நாள்–04.02.2016–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநிலக்கணக்காய்வு தலைவர், சென்னை – 18.
கணக்கு மற்றும் கருவூல இயக்குநர், சென்னை–35
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
கருவூலம் மற்றும் கணக்கு ஆணையர் சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை-35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு, சென்னை-79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
பதிவாளர் வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் .
<u>நகல்</u>
நிதித்துறை, சென்னை – 9
வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மைத் துறை இயக்குநர், சென்னை–5.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 8/2/16